13th September 1958]

SRI C. NATARAJA ODAYAR : இந்த உஷார் விடுதிகளில் இருந்து, அவர்கள் ஓரளவு வருமானம் சம்பாதித்துக்கொள்ளக்கூடிய அளவிற்கு வந்தபின் வெளியேற்றப்பட்ட பிறகு அவர்களால் சிறிய அளவு வருமானம் கிடைக்கப் படுவதாகத் தெரிகிறது. அது எந்த அளவில் என்று சர்க்காரால் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : தனிக் கேள்வி வேண்டும்.

SRIMATHI P. K. R. LAKSHMIKANTHAM: மதுரையில், சென்னையில் இருக்கிற உஷார் விடுதிகளைப் போன்று மற்ற ஜில்லாக்களிலும் ஏற்படுத்த சர்க்காருக்கு உத்தேசம் உண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : சர்க்காரே ஏற்படுத்த வேண்டுமென்ற எண்ணமில்லை. தனி ஸ்தாபனங்களோ, அல்லது தனி நபர்களோ இவைகளை ஏற்படுத்த முன்வந்தால் அவர்களுக்கு வேண்டிய ஆதரவு அளிக்கலாம்.

SRI P. S. K. LAKSHMIPATHIRAJ: இந்த உஷார் விடுதிகளில் அதிகமாகப் பெண்கள் வர காரணமாக இருப்பவர்கள் சினிமா கலைஞர்கள் தான் என்று ஜனங்கள் மத்தியில் பேச்சு இருப்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ஜனங்கள் எதை வேண்டுமானாலும் பேசிக்கொள்ளலாம். நான் அப்படிக் கருதவில்லை.

Local Bodies

*203-R. *Q.*—SRI P. G. MANICKAM : கனம் ஸ்தல ஸ்தாபன அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) கிராம பஞ்சாயத்துக்கள், முனிசிபாலிடிகள், ஜில்லா போர்டுகள், கார்ப்பரேஷன் முதலிய ஸ்தல ஸ்தாபனங்களின் நிர்வாகங்களிலே ஹரிஜனங்களுக்கு அங்கத்தினர் பிரதிநிதித்துவம் ஜனத்தொகை அடிப்படை விகிதாச்சாரத்தில் ஒதுக்கப்பட வேண்டுமென்று ஷெடியூல்ட் ஜாதியார் ஷெடியூல்ட் கூட்டத்தாரின் நலன்களை பாதுகாப்பதற்காக மத்திய அரசாங்கத்தாரால் நியமிக்கப்பட்டிருக்கும் கமிஷனரால் 1955-ம் ஆண்டில் வெளியிடப்பட்ட அறிக்கையை இந்த அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று மத்திய அரசாங்கத்தினிடமிருந்து ஏதாவது செய்தி அறிவிப்பு வந்திருக்கிறதா ?

(ஆ) அப்படியானால், அதன்பேரில் எடுக்கப்பட்டிருக்கும் நடவடிக்கைகள் யாவை ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : (*a*) A communication was received from the Government of India, Ministry of Home Affairs, in September 1956 in the matter.

(*b*) The Government of India were informed in August 1957 that provision already exists for the reservation of seats for the Members of the Scheduled Castes with due regard to their population in section 8 of the Madras Village Panchayats Act, 1950, section 7 of the Madras District Municipalities Act, 1920, and section 9 of the Madras District Boards Act, 1920.

SRI P. G. MANICKAM : கிராமங்களில் உள்ள பஞ்சாயத்து போர்டுகளுக்கு ஜன விகிதாசார அடிப்படையில்தான் மெம்பர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். ஆனால் கிராமங்களில் ஹரிஜனங்கள் ஒவ்வொரு வார்டுகளிலும் தனித் தனியாகப் பிரிந்து வாழ்வதால் அவர்களின்

ஜனத்தொகையையும் எடுத்து அதில் தகுந்த பிரகாரம் அவர்களுக்கு ஸ்தானங்கள் ஒதுக்கப்படுவதில்லை. ரிஸர்வேஷன் என்ற முறையில் தர்மம் கொடுப்பது போல்தான் கொடுக்கப்படுகிறது. ஆகவே ஜன விகிதாசார அடிப்படையில் அவர்களுக்கு ஸ்தானங்கள் ஒதுக்குவதற்கு சட்டம் திருத்தியமைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : ஹரிஜனங்களின் ஜனத்தொகை எங்கு அதிகமாக இருக்கிறதோ அந்தயிடங்களில் அதற்குத் தகுந்த கவனம் செலுத்தி அதற்கேற்ப இடங்கள் ஒதுக்கப்பட்டுத்தான் வருகின்றன. ஆனால் ஏதோ ஒரு இடத்தில் குறைந்த ஜனத்தொகை இருந்தால் அதற்காகச் சட்டத்தைத் திருத்த வேண்டிய அவசியமில்லை என்றுதான் நான் நினைக்கிறேன்.

Anicut-cum-bridge across Vellar

* 203-S *Q.*—SRI R. SRINIVASA IYER: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) the present stage of the proposal to construct an anicut-*cum*-bridge across Vellar river in Arantangi taluk, Tanjore district, and

(*b*) when the work is likely to be taken up?

THE HON. SRI P. KAKKAN: (*a*) The Superintending Engineer has sent a proposal to construct a bridge-cum-regulator at M 6/2. The Chief Engineer for Irrigation has referred this to the Chief Engineer (Highways) for his remarks. The matter is now under correspondence between the Public Works Department and the Highways Department.

(*b*) It will not be possible to say now when the work is likely to be taken up.

SRI R. SRINIVASA IYER : அரந்தாங்கி தாலுகாவில் பாசன ஆதார ஏரிகளில் ஏராளமாக தண்ணீர் இல்லாமல் இருக்கின்றதால் வெள்ளாற்றில் இதுமாதிரி அணைகள், "பிரிட்ஜ்-கம்-டாம்ஸ்" இல்லா விட்டாலும், அங்கு அணைகள் கட்டுவதற்காவது உத்தேசம் உண்டா ?

THE HON. SRI P. KAKKAN : அரந்தாங்கி தாலுகா மிகவும் பின்தங்கிய தாலுகா என்று கருதித்தான் இப்பேர்ப்பட்ட திட்டங்களை அங்கு எடுக்க வேண்டுமென்று அரசாங்கம் அவைகளை கொண்டு வந்திருக் கிறது. கருங்காடு என்றவிடத்தில் ஒரு அணை கட்டலாம் என்று இருக்கிறது. ஆகவே, இந்த இரு திட்டங்களும் பரிசீலனை செய்யப்பட்டு எடுத்துக் கொள்ளப்படலாம் என்று நினைக்கிறேன்.

Avadi Vehicles Depot Civilian Employees' Union

*203-T *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) Avadi Vehicles Depot Civilian Employees, Union, சார்பில் 26–7–1958 தேதி தொழில் மந்திரி அவர்களுக்கு கொடுத்த மெமொராண்டம் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

(ஆ) இல்லை என்றால் ஏன் ?